செ.வெ.எண்:02 நாள்: 02.04.2019

கரூர் மாவட்டம்

**கரூர் மக்களவைத்தொகுதியில் போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களும் 05.04.2019, 10.04.2019 மற்றும் 16.04.2019 ஆகிய நாட்களில் தேர்தல் செலவினப்பார்வையாளரிடம் தங்களது செலவுக்கணக்குகளை சமர்ப்பிக்க வேண்டும் -தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்.இஆப., அவர்கள் தகவல்**

அதன் விபரம் வருமாறு:

23, கரூர் மக்களவை தொகுதியில் போட்டியிடுகின்ற அனைத்து வேட்பாளர்களும் **நேரடியாகவோ அல்லது தங்களின் முகவர்களின் மூலமாகவோ அல்லது இருவருமோ** 05.04.2019, 10.04.2019 மற்றும் 16.04.2019 ஆகிய நாட்களில் காலை 10.00 மணியளவில் கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் தங்களின் தேர்தல் செலவினம் தொடர்பான பதிவேடுகள் மற்றும் ஆவணங்களுடன் தேர்தல் செலவின பார்வையாளரிடம் தங்களின் தேர்தல் செலவின கணக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

தேர்தல் செலவின கணக்குகளை சமர்பிக்கும்போது வேட்பாளர்களால் சரியான, முறையான கணக்குகள் பராமரிக்கப்படவில்லை என்றாலோ, தேர்தல் ஆணையத்தால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள வழிமுறைகளின்படி கணக்குகள் பராமரிக்கப்படாமல் இருந்தாலோ, வேட்பாளர்கள் தங்களின் தேர்தல் செலவின கணக்குகளை சமர்ப்பிக்காமல் இருந்தாலோ, இந்திய தேர்தல் ஆணையம் நிர்ணயம் செய்துள்ள தொகைக்கு மேலாக செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தாலோ, 1951-ம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவ சட்டம் பிரிவு 10A-ன் படியும், 1860-ம் ஆண்டு இந்திய தண்டனை சட்டம் 171 I-ன் படியும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அனைத்து வேட்பாளர்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

எனவே, 23-கரூர் மக்களவை தொகுதியில் போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களும் 05.04.2019, 10.04.2019 மற்றும் 16.04.2019 ஆகிய நாட்களில் காலை 10.00 மணி முதல் மாலை 5 மணிவரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் முதல் தளத்தில் உள்ள கூட்ட அரங்கில் தேர்தல் செலவின பார்வையாளரிடம் தங்களது தேர்தல் செலவின கணக்குகளை சமர்ப்பிக்க வேண்டும்.

இவ்வாறு என தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன், இ.ஆ.ப., தெரிவித்துள்ளார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.